செ.வெ.எண்:282 நாள்:
15.05.2021

**அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத் தொகையினை மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.கோவி செழியன் அவர்கள் வழங்கினார்.**

தஞ்சாவூர் மாவட்டம், கூட்டுறவு சங்கத்தின் மூலம் செயல்பட்டு வரும் நியாயவிலை கடைகாளான கும்பகோணம் பகுதி வார்டு 33 நியாய விலைக் கடைகளில், திருவிடைமருதூர் தேரடி வீதி நியாய விலைக் கடைகளில், ஆடுதுறை கடைவீதி நியாய விலைக் கடைகளில், பந்தநல்லூர் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில், சேங்கனூர் ஊராட்சி நியாய விலைக் கடைகளில் அரசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத் தொகை முதல் தவணையாக ரூ.2000/- வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப.,அவர்கள், தலைமையில் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.கோவி செழியன் அவர்கள் இன்று (15.05.2021) தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், கொரோனா நோய் தொற்றுக் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை குறைக்கும் வகையிலும், பெருந்தொற்று நேரத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும் பொதுவிநியோகத் திட்ட அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.4000/- வீதம் நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்திற்கான கோப்பில் 07.05.2021 கையெழுத்திட்டார்கள். அதனடிப்படையில், நடப்பு ஆண்டு மே மாதத்தில் முதல் தவணையாக ரூ.2000.'.- கொரோனா நிவாரண நிதி வழங்ககும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

அதன்அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் மூலமாக 2,63,185 குடும்ப அட்டைகளுக்கு முதல் தவணையாக ரூ.52,63,70,000/- வழங்கப்படவுள்ளது. அதன்படி, கொரோனா பெருந்தொற்று காலத்தில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் டோக்கன்கள் வழங்கப்பட்டு, எந்த தேதி மற்றும் நேரத்தில் நியாயவிலைக்கடைகள் மூலமாக பெற்றுக்கொள்ளலாம் என்பது முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 200 டோக்கன் விதம் உரிய படிவத்தில் உறங்கும் நாள் நேரம் போன்ற விவரங்களை குறிப்பிட்டு டோக்கன்கள் 10.05.2021 ஆகிய மூன்று தினங்களில் வீடுதோறும் சென்று நியாய விலைக்கடை பணியாளர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது

ரூ.2000/- நிவாரண நிதி 15.05.2021 முதல் தினசரி காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கொரோனா நிவாரண உதவித்தொகை மற்றும் சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள ஒரு நாள் நோய் தடுப்பு வழிகாட்டுதல்களை தவறாது கடைபிடித்து விலைக்கடை பணியாளர்கள் அறிவித்தப்பட்டுள்ளனர்.

**கொரோனா நிவாரணத் தொகையினை வழங்கி மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.கோவி செழியன் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது**.

தமிழகத்தினுடைய ஒப்பற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று முதல் கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு உடனடியாக ரூபாய் இரண்டாயிரம் வழங்கச் சொல்லி, தஞ்சாவூர் மாவட்டத்தில் எல்லா ரேஷன் கடைகளிலும் அந்த திட்டம் இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி வரிசையில் இருந்த பொழுது தலைவர் ஏழை எளிய மக்களுக்கு உடனடியாக ஐந்தாயிரம் வழங்க வேண்டும் என அரசுக்கு வேண்டுகோள் வைத்தார். அன்றைய அரசு ஆயிரம் ரூபாய் வழங்கியது. மீதம் 4000 ரூபாய், ஜுன் மாதம் 3 ஆம் தேதி கலைஞர் பிறந்த நாளில் வழங்குவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருந்தார். ஆனால் இன்றைய சூழலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாக, முதல் தவணையாக ரூபாய் 2000, தொடர்ந்து அந்த நிதியை கொடுக்க தமிழக அரசு முயற்சி எடுத்து வருகிறது. தஞ்சாவூரமாவட்டத்தில் எல்லா பகுதியிலும்

இதே நேரத்தில் எல்லா கடைகளும் அந்த பணத்தை கொடுப்பதற்கு மாவட்ட நிர்வாகமும், அந்த துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் திறம்பட பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ந்து மீதத் தொகை வழங்குவதற்கு தமிழக அரசு முயற்சி எடுத்து வருகிறது. அந்த வகையில் ஏழை எளிய மக்களுடைய வாட்டம் போக்குகின்ற நல்ல திட்டத்தை கொண்டு வந்த தமிழக முதல்வருக்கு திருவிடைமருதூர் தொகுதி சார்பில், தஞ்சாவூர் மாவட்டத்தின் சார்பில், அனைத்து தரப்பு மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியை முதல்வருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனாத் தொற்று அதிகரித்திருக்கிற காரணத்தால், ஊரடங்கை பிறப்பித்து, இன்றைக்கு கட்டுப்படுத்துகிற நிலை தொடர்ந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுகாதாரத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, வெளி மாநிலங்களில் இருந்து ஆக்சிஜன் பற்றாக்குறையை போக்கக் கூடிய வகையிலும், ஆக்சிஜன் படுக்கைகளை அதிகரிக்கக் கூடிய வகையிலும், மருத்துவமனைகளில் படுக்கை பற்றாக்குறை ஏற்படுகிற இடங்களில் மற்றும் பல இடங்களை மருத்துவமனையாக்கும், தீவிர முயற்சியில் ஈடுபட்டு தொற்று நோய் பரவுவதை கட்டுப்படுத்த முயற்சியில் தமிழக அரசு பெரும் முயற்சி எடுத்து வருகிறது. அது விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து மக்களை பாதுகாக்கிற கடமையை தமிழக அரசு நிச்சயம் செய்யும். ஏன மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.கோவி செழியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ராமலிங்கம் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அரவிந்தன். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி. உஷா புண்ணியமூர்த்தி,தஞ்சாவூர் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு.சு. மனோகரன், கும்பகோணம் கோட்டாட்சியர் திரு.விஜயன், கும்பகோணம் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி. காயத்ரி, திருவிடைமருதூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி.பி. சுபா, திருப்பனந்தாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி.ஆர்.தேவி ராமச்சந்திரன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்**